# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம், பேர்ன் பேட்டை, நந்தனம், சென்னை - 600 035.
தொலைபேசி: 044-29515590

**ஆணை நாள். 06.07.2026**

**முன்னிலை**

**திரு. வி.பி.ஆர். இளம்பரிதி, எம்.ஏ., பி.எல்., எம்.பில்.,**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண்.SA 3474/D/2024**

திரு ர.செல்வராஜ் .. மனுதாரர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர்/
இணை ஆணையர் (நிர்வாகம்),
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர்
வழங்கல் துறை,
இயக்குநரகம்,
சென்னை - 600 028. .. பொது அதிகார அமைப்பு

**பார்வை:-**

| | |
|---|---|
| தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 6(1)-ன் கீழ் மனுதாரரின் மனு நாள் | 25.09.2023 |
| பிரிவு 19(1)-ன் கீழான முதல் மேல் முறையீட்டு மனுவின் நாள் | 21.11.2023 |
| பிரிவு 19(3)-ன் கீழான இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் நாள் | 15.03.2024 |

******

**ஆணை**

இன்று 06.07.2026 முற்பகலில் இவ்வாணையத்தில் நடைபெற்ற விசாரணைக்கு மனுதாரர் திரு ர.செல்வராஜ் ஆஜராகவில்லை. மனுதாரர் இவ்வாணையத்திற்கு 26.06.2026 தேதியிட்ட கடிதம் வாயிலாக உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் தொலைதூர பயணம் செய்ய இயலாத காரணத்தினால் ஆணையத்தின் விசாரணைக்கு நேரில் ஆஜராக இயலவில்லையென்றும், இவ்வழக்கின் விசாரணையை வேறு தேதியில் திருப்பூர் மாவட்ட ஆட்சியர் வளாகத்தில் காணொளி காட்சி மூலம் நடத்துமாறும் ஆணையத்தைக் கோரியுள்ளார். இதனை ஆணையம் பதிவு செய்கிறது. பொதுத் தகவல் அலுவலர். இணை ஆணையர் (நிர்வாகம்), நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, இயக்குநரகம்,

சென்னை -28 அவர்கள் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்களின் கூட்டத்தில் கலந்து கொள்ள செல்ல வேண்டியுள்ளதால் ஆணையத்தின் விசாரணைக்கு நேரில் ஆஜராக இயலவில்லையென்றும், பொது அதிகார அமைப்பின் சார்பாக பொதுத்தகவல் அலுவலர். திரு வெங்கடலட்சுமணன், கண்காணிப்பாளர், நகராட்சி நிர்வாக இயக்குநரக அலுவலகம், சென்னை -28 அவர்கள் மட்டும் நேரில் ஆஜரானார். இதனை ஆணையம் பதிவு செய்கிறது.

2. மனுதாரர் 25.09.2023 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில், தமிழ்நாடு முழுவதும் நகராட்சிகளுக்கு தெருவிளக்குகள் விநியோகம் செய்யப்பட்டுள்ளதா என்ற விவரம், அவ்வாறு டெண்டர் விடப்பட்டு இருந்தால் தற்போது டெண்டர் எடுத்த நிறுவனம் பற்றிய முழுவிபரம் தொடர்பான 3 இனங்களில் தகவல்களைக் கோரி பொது தகவல் அலுவலர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, தலைமை செயலகம், சென்னை -9 அவர்களுக்கு மனு தாக்கல் செய்துள்ளார்.

3. பொதுத் தகவல் அலுவலர், தகவல் வழங்காத காரணத்தால், மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 19(1)ன் கீழான 21.11.2023 தேதியிட்ட முதல் மேல்மறையீட்டு மனுவினை தாக்கல் செய்துள்ளார். மேல்முறையீட்டு அலுவலரும் தனக்கு முழுமையான தகவல் வழங்காத காரணத்தால், மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 19(3)ன் கீழான 15.03.2024 தேதியிட்ட தனது இரண்டாம் மேல்முறையீட்டு மனுவினை இவ்வாணையத்தில் தாக்கல் செய்துள்ளார். அம்மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு இன்று (06.07.2026) நேரடி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத்தகவல் அலுவலர் மனுதாரர் கோரிய அனைத்து இனங்களுக்கான தகவல்களை 06.11.2023 மற்றும் 22.12.2023 ஆகிய தேதியிட்ட கடிதங்கள் வாயிலாக அனைத்து இனங்களுக்கான முழுமையான தகவல்களை பதிவஞ்சல் மூலம் வழங்கியுள்ளதாக ஆணையத்தில் தெரிவித்து, அக்கடிதத்தின் நகலினை இவ்வாணையத்தில் சமர்பித்தார்.

5. இன்றைய விசாரணை மற்றும் ஆவணப் பரிசீலனையின் முடிவில், மனுதாரர் ஆஜராகாத காரணத்தினால் மனுதாரரின் தகவல் கோரும் மனுவையும், பொதுத்தகவல் அலுவலரின் தகவலையும் இணைத்துப் பரிசீலனை செய்கையில் மனுதாரருக்கு முழுமையான தகவல்கள் வழங்கப்பட்டுள்ளது இவ்வாணையத்தால் உறுதி செய்யப்பட்டு, இவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனு முற்றாக்கம் செய்த உத்தரவிடப்படுகிறது.

**ஒம்/-(வி.பி.ஆர். இளம்பரிதி)**
**மாநில தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண்.SA 3474/D/2024</u>**

**பெறுநர்**

**<u>பொது அதிகார அமைப்பு</u>**

பொதுத் தகவல் அலுவலர்/
இணை ஆணையர் (நிர்வாகம்),
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர்
வழங்கல் துறை,
இயக்குநரகம்,
சென்னை - 600 028.

**<u>மனுதாரர்</u>**
திரு R.செல்வராஜ்,
த/பெ. திரு P.ரங்கசாமி,
க.எண்.1E1, அன்னூர் ரோடு,
சாமளாபுரம்,
மங்கலம் வழி,
திருப்பூர் மாவட்டம் - 641 663.

***Copy to: File***
***VP / PA***